



# கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

# கால்நடை பராமரிப்பு

## மானியக் கோரிக்கை எண் : 6

அறிவிப்புகள்

2024 – 2025

# கால்நடை பராமரிப்பு, பால்வளம்,
# மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

## கால்நடை பராமரிப்பு

### மானியக் கோரிக்கை எண் : 6

## அறிவிப்புகள்
## 2024 - 2025


## அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்

மீன்வளம் – மீனவர் நலத்துறை மற்றும்
கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்

## கால்நடை பராமரிப்பு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் 11 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**

மீன்வளம் - மீனவர் நலத்துறை மற்றும்
கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்

**1. ஏழ்மை நிலையில் உள்ள கணவனை இழந்த, கணவனால் கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற முப்பத்தெட்டாயிரத்து எழுநூறு பெண் பயனாளிகளுக்கு தலா 40 கோழிக் குஞ்சுகள் வீதம் ஆறு கோடியே நாற்பத்தி ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் நாட்டின கோழிக் குஞ்சுகள் 50 விழுக்காடு மானியத்தில் வழங்கப்படும்.**

புழக்கடை கோழி வளர்ப்பானது ஏழ்மை மக்களின் ஊட்டச்சத்து தேவையை பூர்த்தி செய்வதோடு பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், அவர்களது வருமானத்தை பெருக்கிடவும் வழிவகை செய்வதால், தமிழகத்தில் ஏழ்மை நிலையில் உள்ள, குறிப்பாக கணவனை இழந்த, கணவனால் கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற 38,700 பெண் பயனாளிகளுக்கு (ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 100 பயனாளிகள் வீதம், சென்னை நீங்கலாக) தலா 40 நாட்டின கோழிக் குஞ்சுகள் 50 விழுக்காடு மானியத்தில் ரூபாய் ஆறு கோடியே நாற்பத்தி ஐந்து இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்படும்.

**2. உயர் மரபுத்திறன் கொண்ட கால்நடைகளை இனப்பெருக்கத்திற்காக வளர்ப்பதற்கும், அதிக பரப்பளவில் பசுந்தீவனப் பயிர்களை உற்பத்தி செய்வதற்கும் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ள நடுவூர் மாவட்ட கால்நடைப் பண்ணை ஐந்து கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.**

அதிக பரப்பளவில் பசுந்தீவனப் பயிர்களை உற்பத்தி செய்து தீவன உற்பத்தியைப் பெருக்குவதற்கும், உயர் மரபுத் திறன் கொண்ட கால்நடைகளை இனப் பெருக்கத்திற்காக வளர்க்கும் பொருட்டும் ஐந்து கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ள நடுவூர் மாவட்ட கால்நடைப் பண்ணை மேம்படுத்தப்படும்.

**3. அதிக பரப்பளவில் பசுந்தீவனப் பயிர்களை உற்பத்தி செய்வதற்கும், உயர் மரபுத்திறன் கொண்ட கால்நடைகளை இனப் பெருக்கத்திற்காக வளர்ப்பதற்கும், புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணை ஐந்து கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.**

புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையில் உயர் மரபுத்திறன் கொண்ட கால்நடைகளை இனப் பெருக்கத்திற்காக வளர்ப்பதற்கும், பசுந்தீவனப் பயிர்களை உற்பத்தி செய்வதற்கும் ரூபாய் ஐந்து கோடி செலவில் உள்ளீடு வசதிகள் வழங்கப்பட்டு இப்பண்ணை மேம்படுத்தப்படும்.

**4. செட்டிநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணையில் பசுந்தீவன உற்பத்தியை மேலும் அதிகரிக்க பயிரிடப்படாத 100 ஏக்கர் நிலப்பரப்பில் அதிக மகசூல் தரும் பசுந்தீவனப் பயிர்கள் ஐந்து கோடி ரூபாய் செலவில் பயிரிடப்பட்டு தீவன உற்பத்தி பெருக்கப்படும்.**

செட்டிநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணையில் உள்ள பயிரடப்படாத 100 ஏக்கர் நிலப்பரப்பில் அதிக மகசூல் தரும் பசுந்தீவனப் பயிர் வகைகள் ரூபாய் ஐந்து கோடி செலவில் உற்பத்தி செய்யப்பட்டு, தேவைப்படும் விவசாயிகளுக்கு நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

**5. தீவன விரயத்தைக் குறைப்பதற்காக, மின்சாரம் மூலம் இயங்கும் புல் நறுக்கும் கருவிகள் 3000 பயனாளிகளுக்கு 50 விழுக்காடு மானியத்தில் ஐந்து கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

விவசாயிகள் தங்கள் நிலங்களில் உற்பத்தி செய்யப்படும் உலர் மற்றும் பசுந்தீவனங்களை சிறிய துண்டுகளாக நறுக்கி அவற்றின் தரம் மாறாமல் கால்நடைகளுக்கு உணவாக அளிப்பதற்கு, மின்சாரத்தால் இயக்கப்படும் 3000 புல்நறுக்கும் கருவிகள் ரூபாய் ஐந்து கோடி செலவில் 50 விழுக்காடு மானியத்தில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

**6. மாநிலத்தில் பசுந்தீவன உற்பத்தியை பெருக்கும் பொருட்டு ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சம் செலவில் விவசாயிகளின் 2000 ஏக்கர் பாசன நிலங்களில் பசுந்தீவன உற்பத்தி மேற்கொள்ளப்படும்.**

மாநிலத்தில் பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும், கால்நடைகளுக்கு உணவளிப்பதற்காகவும் பாசனத்தில் உள்ள 2000 ஏக்கர் விவசாயிகளின் நிலப்பரப்பில் சாகுபடி செய்வதற்காக ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சம் செலவில் அதிக மகசூல் தரும் தானிய வகை மற்றும் பயறு வகை தீவன விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

**7. மானாவாரி சாகுபடியின் கீழ் உள்ள விவசாயிகளின் 5000 ஏக்கர் நிலங்களில் பசுந்தீவன உற்பத்தியை மேற்கொள்ளும் பொருட்டு ஒரு கோடியே ஐம்பத்தி ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் அந்நிலங்களில் தீவன உற்பத்தி அதிகரிக்கப்படும்.**

விவசாயிகளின் கால்நடைகளுக்கு சீரான ஊட்டச்சத்தை உறுதி செய்வதற்காகவும் தீவனத்தின் சுவை மற்றும் செரிமானத்தை அதிகரிப்பதற்காகவும் மாநிலம் முழுவதும் 5000 ஏக்கர் விவசாயிகளின் மானாவாரி நிலங்களில் சாகுபடி செய்ய ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்தி ஐந்து இலட்சம் செலவில் தீவன சோளம் மற்றும் தட்டைப்பயறு விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

**8. கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தீவன உற்பத்திக்கான மேம்படுத்தப்பட்ட உத்திகள் குறித்து கால்நடை மருத்துவர்கள் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் ஆகியோருக்கு பத்து இலட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.**

மாநிலத்தில் பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனங்களின் தேவை அதிகம் உள்ளதால், தீவன அபிவிருத்தியில் உள்ள சமீபத்திய புதுமையான தொழில்நுட்பம் பற்றி தமிழ்நாடு வேளாண்மைத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையில் பணிபுரியும் 120 அலுவலர்களுக்கு ரூபாய் பத்து இலட்சம் செலவில் தீவன உற்பத்தி, பாதுகாப்பு முறைகள், மேய்க்கால்/மேய்ச்சல் நிலம் மற்றும் பண்ணை இயந்திரமயமாக்கல் குறித்த பயிற்சி கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும்.

**9. ஒருங்கிணைந்த சுகாதாரத்தின் கீழ் ஐந்து இலட்சம் செல்லப் பிராணிகளுக்கு ஒரு கோடி ரூபாய் செலவில் 50 விழுக்காடு மானியத்தில் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடப்படும்.**

விலங்குகளில் இருந்து மனிதர்களுக்கு பரவும் கொடிய நோயான வெறிநாய்க்கடி நோயினை தடுப்பதற்காகவும் மனிதர்களுக்கிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் ஒருங்கிணைந்த சுகாதாரத்தின் கீழ் 5 இலட்சம் செல்லப் பிராணிகளுக்கு ரூபாய் ஒரு கோடி செலவில் 50 விழுக்காடு மானியத்தில் வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி போடப்படும்.

**10. கால்நடை நிலையங்களில் நவீன நோயறியும் கருவிகளை கையாளுவதற்கென 400 கால்நடை மருத்துவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி ஒரு கோடி ரூபாய் செலவில் அளிக்கப்படும்.**

கால்நடை நிலையங்களில் கால்நடைகளுக்கு நவீன தொழில் நுட்பங்களில் சிகிச்சை அளிக்கவும், நவீன நோயறிதல் கருவிகளை திறம்பட கையாளவும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் உள்ளிட்ட உயர் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்கள் மூலம் 400 கால்நடை மருத்துவர்களுக்கு ரூபாய் ஒரு கோடி செலவில் பயிற்சி அளிக்கப்படும்.

**11. சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி விடுதி வளாகத்தில் ரூபாய் இருபத்தி ஐந்து கோடி நிதி ஒதுக்கீட்டில் மாணவியர் விடுதிக்கான கட்டடம் கட்டப்படும்.**

சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவியருக்கு பாதுகாப்பான சூழலை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் வரும் சென்னை வேப்பேரியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி விடுதி வளாகத்தில் தங்கி பயிலக்கூடிய 300 மாணவியருக்கு பாதுகாப்பான விடுதி ரூபாய் இருபத்தி ஐந்து கோடி செலவில் கட்டப்படும்.


தமிழ்நாடு அரசு
GOVERNMENT OF TAMIL NADU
8 திட்டப்பணிகள்
ரூபாய் 14 கோடியே 14 இலட்சம் 86 ஆயிரம்
8 திட்டப்பணிகள்
ரூபாய் 14 கோடியே 14 இலட்சம் 86
ரூபாய் 2 கோடியே 9 இலட்சத்து 36